Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 151/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர். | - | நந்தகோபால் | வட்டம் | - | கள்ளக்குறிச்சி |
| த/பெ. | | தங்கராசு | சமயம் | - | |
| கிராமம் | - | ரிஷிவந்தியம் | வயது | - | 40 |

10.10.2025

1 வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜரில்லை. 2,3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ரிஷிவந்தியம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 05.11.2015 ந் தேதி அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 10.00 மணியளவில் முகையூரை சேர்ந்த தெய்வீகன் மனைவி லூசிலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.373/2015 ச/பி. 294(பி), 323, 354, 506(1) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை முறையே அசாஆ.4 ஆகும்.**

3. மேற்படி வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்கரை மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **அந்த வரைபடம் அசாஆ.5,ஆகும்.**

4. பின்பு சாட்சிகள் லூசிலா, மாணிக்கம், பிரதீபா, சந்திரன், சக்கரை, முருகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை

என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் எதிரி அம்பிகா என்பவரைஅன்றே 15.00 மணியளவில் முகையூர் பேருந்து நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இந்தவ ழக்கில் தொடர்புடைய மற்ற எதிரிகள் முன்பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்ய முடியவில்லை.

6. பின்னர் காயம்பட்ட லூசிலா என்பவர் மருத்துவமனையில் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்று தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை ச/பி. 294(பி), 323, 354, 506(1) இதச விலிருந்து ச/பி. 294(பி), 352, 354, 506(1) இதச -ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகும்**. இத்துடன் அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 294(பி), 352, 354, 506(1) இதச குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. சம்பவம் 30.10.2015 ல் நடந்தது என்றால் சரிதான். 6 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். 1வது எதிரி கொடுத்த புகாரின் மீது குற்ற எண்.374/2015 என நான் தான் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். இருவழக்கிலும் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது நான் தான் என்றால் சரிதான்.

2. 1வது எதிரி கொடுத்த புகாரின் மீது பதியப்பட்ட வழக்கில் இந்த வழக்கின் புகார்தாரர் குற்றத்தை ஒப்புக்கொண்டு **ரூ.1900/-அபராதம் செலுத்தியதற்காக எங்கள் காவல் நிலையத்திலிருந்து கொடுக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் எ.சா.ஆ.1 ஆகும்.**

3. அ.சா.4 மாணிக்கம் எனது விசாரணையில் 1வது எதிரி மாணிக்கம் சந்தில் செங்கல்லை வைத்து அடிப்பட்டிருந்ததை பார்த்துவிட்டு தெய்வீகன் மனைவி லூசிலா வந்து மாணிக்கத்தை அசிங்கமாக திட்டி, பேசி இரும்பு பைப்பால் அடித்துவிட்டு கொடுவா கத்தியை காட்டி மிரட்டினார், மறிக்க வந்த மாணிக்கம் மனைவி கையை பிடித்து அழுத்தி வளையலை உடைத்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

4. அ.சா.4 மாணிக்கம் எனது விசாரணையில் சொல்லியுள்ளதிலிருந்து இந்த சம்பவத்தை தூண்டியது லூசிலா என தெரியவந்ததா என்றால் சரிதான். சம்பவத்தை தூண்டியது லூசிலா என்று தெரியவந்தும், எதிரிகள் மீது சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் முதல் சம்பவத்தில் லூசிலா என்பவர் கொடுத்த புகார் சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதன் பிறகு அரை மணி நேரம் கழித்து இவ்வழக்கின் எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் மீது விசாரணை செய்ததில் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. அ.சா.4 மாணிக்கம் எனது விசாரணையில் மாலை 06.00 மணியளவில் லூசிலா அசிங்கமாக பேசி இரும்பு பைப்பால் அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதன் முதலில் இந்த சம்பவத்தைஆரம்பித்ததேலூசிலா என்பதால் அவர்மீது மட்டுமே வழக்கு பதிவு செய்திருக்க

வேண்டும் என்றும், எதிரிகள் மீது சரியாக புலன் விசாரணை செய்யப்பட்டது தவறு என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.